**இ.பொ.து.ம.செ.ப.ந.க. எண். சி1/873/2021**

**தீர்மானஎண்.679/2021** **நாள்:28-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம்- 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு 2021-22 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். *180/78* நாள். *26.02.78* ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து *1978-79* ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் *(1* முதல் *10* வரை*)* அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் *2013* முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, மத்திய வட்டாரமாக மண்டலம்-*6* முதல் *10* வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-*6* முதல் *10* வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா. டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொகிலைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் *263* எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். *190/2021,* நாள். *15.02.2021* ல், மண்டலம் *8* லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் கொள்முதல் செய்ய, *2021-22* ஆம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி ஆணையின்படி, மண்டலம் - 8 லாரி நிலைய வாகனங்கள், மற்றும் மண்டலம் *7* முதல் *10* வரைக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு டீசல் விநியோகம் செய்யவும், மற்றும் மண்டலம்-*7* லாரி நிலையம் தனியார் மயமாக்கல் காரணமாக, தனியார்மயமாக்கப்பட்ட தேதியில் இருந்து வாகன டீசல் விநியோகம் மண்டலம்-*8* லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கில் நிறுத்தப்படும் என ஆணை பெறப்பட்டது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவையான டீசல் *1260* கிலோ லிட்டர் கொள்முதல் செய்ய *%.9,96,17,704/-* (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்றாறு லட்சத்து பதினேழாயிரத்து ஏழுநூற்று நான்கு மட்டும்) ஆணை பெறப்பட்டது.

மேலும், மண்டலம்-*7* லாரி நிலையம் தனியார் மூலம் பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்ததால் அதற்கான டீசல் பயன்படும் பட்டியல் முழு நடப்பு நிதி ஆண்டு *(2021-22)* தீர்மானத்தில் சேர்க்கபடவில்லை. தற்போது வரை மண்டலம் *8* லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு வாங்கிய டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| **2021-22** | தொகை (%) | கிலோ லிட்டர் |
|---|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | **9,96,17,704.00** | **1260** |
| முன்கூட்டியே வரையப்பட்டது | **6,68,16,872.00** | **756** |
| **இருப்பு** | **3,28,00,832.00** | **504** |

**இ.பொ.து.ம.செ.ப.ந.க. எண். சி1/873/2021**

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் டீசல் 504KL கொள்முதல் செய்ய ரூ.3,28,00,832/- இவை வரவிருக்கும் நாட்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. தற்போது 1 KLக்கான தொகை ரூ.90,094/- எனவே, 504KL கொள்முதல் செய்வதற்கு தேவைப்படும் தொகை தோராயமாக ரூ.4,54,07,376 தேவைப்படும். இந்த வேறுப்பாட்டின் விலை ஏற்றத்தினால், தோராயமாக 364KL டீசல் மட்டுமே கொள்முதல் செய்யப்படும், எனவே மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய வேண்டப்படுகின்றது.

தற்பொழுது மண்டலம்-7 தனியார்மயமாக்கப்படாததால் மண்டலம்-7 க்கு உட்பட்ட வாகனங்களுக்கு தேவைப்படும் எரிப்பொருள் டீசல் மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பபட தேவைப்படுகின்றது. எனவே, மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய வேண்டப்படுகின்றது.

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-7, 8 லாரி நிலைய வாகனங்கள், மற்றும் மண்டலம் – 7 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

| நிறுவனங்களின் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷ்ன் | மண்டலம் 8 லாரி நிலையம், எண்.5C, ப்ரூவரி சாலை, செனாய் நகர், சென்னை – 6000 030 | மண்டலம் 8 லாரி நிலைய வாகனங்கள், மண்டலம் – 7 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பி ர த்யோக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷ்ன் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தை கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தில் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 KLக்கான தொகை (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் (2021-2022) ஆம் ஆண்டிற்கு |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் | டீசல் | ரூ.90,094 (நாள் :18.08.2021) ந.கோ.ப.எண் | 936 |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட | 936 கி.லி. x ரூ.90,094= ரூ. 8,43,27,984/- (ரூபாய் எட்டு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து இருபத்து ஏழாயிரத்து தொள்ளயிரத்து எண்பத்து நான்கு மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்க்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால்,இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

**இ.பொ.து.ம.செ.ப.ந.க. எண். சி1/873/2021**

மேலும், மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய தோரயமாக, 936 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ. 8,43,27,984/- (ரூபாய் எட்டு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து இருபத்து ஏழாயிரத்து தொள்ளயிரத்து எண்பத்து நான்கு மட்டும்) தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2021-2022 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை - கணக்கு எண்: 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்,07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்திர ஆணை வெளியிடப்பட்டுள்ளது,

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001.-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் – 7, 8 லாரி நிலைய வாகனங்கள், மற்றும் மண்டலம் – 7 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரி பொருள் (டீசல்) மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,
2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருள் 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் 936 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ. 8,43,27,984/- (ரூபாய் எட்டு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து இருபத்து ஏழாயிரத்து தொள்ளயிரத்து எண்பத்து நான்கு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வவ்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்து, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வவ்போது RTGS மூலமாக அளிக்கவும்,
6. இதற்கான செலவினத்தை 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்: 230-20-03-06- எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,
7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 25.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**மஅ.2/சு.து.ந.க.எண்.எச்1/2473/2021**

**தீர்மானஎண்.680/2021** **நாள்:28-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2 - சுகாதாரத் துறை - கோட்டம் -15 முதல் 21 வரை கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் கண்டறிய கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு தேவையான பணியாளர்கள் கொரோனா நோய் தடுப்பு பணியாளர்களை 140 நபர்களை தற்காலிக பணியாளர்களாக நியமிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது, மேலும், ஒரு மாதத்திற்கு 01-08-2021 முதல் 31-08-2021 வரை 140 நபர்களை நியமிக்கவும், மற்றும் ஊதியம் வழங்கவும் அனுமதி.**

ஆணையர் அவர்களின் 08.04.2021 நாளிட்ட செயல் முறை ஆணையின்படி, மண்டலம்-2, சுகாதாரத் துறை, மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரை உள்ள கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 26671 வீடுகளை 250 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு முதற்கட்டமாக கொரோனா தடுப்பு பணியாளர்கள் நியமிக்க கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மண்டலம் 2, சுகாதாரத் துறை, மணலி (கோட்டம் 15 முதல் 21 வரை) 7 கோட்டங்களில் 26671 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு 250 செக்டரான கொரோனா நோய் தடுப்பு கணக்கெடுக்கும் பணிகளுக்கு தற்போது கூடுதலாக 215 நபர்களை 01-04-2021 முதல் 30-06-2021 வரை தற்காலிகப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு தற்போது 30-06-2021 அன்றுடன் முடிவடைந்து விட்டது, மேலும், ஒரு மாதத்திற்கு 01-07-2021 முதல் 31-07-2021 வரை நியமிக்க அனுப்பப்பட்ட கோப்பில் 215 நபர்களுக்கு பதிலாக, மாநகர நல அலுவலர் அவர்களின் 16.06.2021 நாளிட்ட அறிவுறுத்தலின்படி பாதியாக குறைத்து அனுப்ப பெருநகர சென்னை மாநகராட்சி மாநகர நல அலுவலர் அவர்களால் கோப்பு திருப்பப்பட்டது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 25.06.2021 நாளிட்ட செயல் முறை ஆணையின்படி ICMR ன் படி குறைத்து 215 நபர்களுக்கு பதிலாக 140 நபர்களை தற்காலிகமாக நியமிக்கப்பட்டு மற்றும் ஊதியம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 140 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. **16,96,940/-** என்ற அளவில் (எழுத்தால் ரூபாய் பதினாறு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) மதிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ.எண். | கோட்டம் எண். | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | மொத்த செக்டார் எண்ணிக்கை | ஏற்கனவே உள்ள பணியாளர்கள் | ஏற்கவே உள்ள பணியாளர்கள் | IMCR GUIDELINES முன்மொழியப்பட்ட குறைப்பு | அறிவுறுத்தின்படி தேவைப்படும் பணியளர்கள் | கோட்டம் வாரியாக 5% (BUFFER) பணியாளர்களின் | ஒரு மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | 5967 | 32 | 4 | 28 | 30% | 20 | 0 | 242420 |
| 2 | 16 | 3860 | 38 | 7 | 30 | 30% | 23 | 0 | 278783 |
| 3 | 17 | 1810 | 21 | 5 | 16 | 30% | 11 | 0 | 133331 |
| 4 | 18 | 2610 | 26 | 4 | 22 | 60% | 10 | 0 | 121210 |
| 5 | 19 | 7975 | 97 | 13 | 85 | 30% | 58 | 0 | 703018 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 20 | 2343 | 18 | 4 | 16 | 30% | 11 | 0 | 133331 |
| 7 | 21 | 2106 | 18 | 2 | 18 | 60% | 7 | 0 | 84847 |
| **மொத்தம்** | | **26671** | **250** | **39** | **215** | | **140** | **0** | **1696940** |

எனவே, மண்டலம் 2, மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரை உள்ள குறுவட்டப் பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 26671 வீடுகளை 250 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு 215 தற்காலிக பணியாளர்களை கடந்த 08-04-2021 முதல் 31-07-2021 வரை தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டு தற்போது 31-07-2021 அன்றுடன் முடிவடைகிறது. மேலும், ஒரு மாதத்திற்கு 01-08-2021 முதல் 31-08-2021 வரை 140 நபர்களை நியமிக்க சிறப்பு அதிகாரி அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

(அ) மண்டலம்2, கோட்டம் 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகளுக்கும், நோய் தொற்று பரவாமல் தடுக்கும் கொரோனா நோய் தடுப்பு பணியாளர்களை 140 தற்காலிக பணியாளர்களாக நியமிக்கவும்,

(ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 140 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. **16,96,940**/- என்ற அளவில் (எழுத்தால் ரூபாய் பதினாறு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதியும்,

(இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03-லிருந்து செலவு செய்யவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 26.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

## CE (GI).C.NO: A2/0293/2020

**Resolution No.681/2021** **Date:31-08-2021**

**Greater Chennai Corporation – C.E (General) Office – National Clean Air Programme – XV FC Grant of Rs.180 Cr. Sanctioned – MoU with Institute of Repute (IoR) signed – Engagement of IIT-Madras for proposals received from IIT Madras – For approval.**

The Government of India has launched National Clean Air Programme (NCAP) as a long-term, time-bound, national level strategy to tackle the air pollution problem across the country in a comprehensive manner with targets to achieve 20% to 30% reduction in Particulate Matter concentrations by 2024 keeping 2017 as the base year (Five-year programme from 01.04.2020)

The $15^{th}$ Finance Commission has recommended a separate grant for air quality improvement in 42 cities/urban agglomerations in the country having million plus population. Three cities of Chennai, Madurai and Tiruchirappalli are included in the list. As part of this, $15^{th}$ FC has granted 181 Cr to Chennai (90.5 Cr on 13.11.2020 and 90.5 Cr on 19.04.2021).

City Action Plan, Micro Plan Report on Emergency Response System, IT enabled data management system for air pollution monitoring were furnished to CPCB through TNPCB on 19.03.2021. MoU has been executed between GCC, TNPCB and IIT-M on 06.05.2021

IIT-Madras as Institute of Repute (IoR) will act as a technical partner for the city of Chennai for implementation of NCAP. IIT-M will extend all necessary knowledge-based support to SPCB and GCC. IoR may undertake Air Quality Monitoring and modelling work, data analysis, data utilisation, compilation, report preparation etc., as required by CPCB from time to time.

Based on the above, IIT-M has furnished the project proposals on Source Apportionment and Carrying Capacity Assessment for Chennai City under National Clean Air Programme. The scope of apportionment study at Chennai City includes estimation of source contribution to ambient air pollution, locating pollution sources, ambient air Quality Monitoring at most affected locations (hotspots), Emission Inventory. City Action Plan, Micro Action Plan and other reports are to be periodically updated and sent to CPCB through TNPCB.

The project proposal of IIT-M is mentioned below.

| S.No | Items | | Monitoring Period | Unit price | Total |
|---|---|---|---|---|---|
| A | MANPOWER (12 Months) | | | | |
| 1 | Project Consultant (Part - Time) | | 12 Months | 50,000 | 6,00,000 |
| 2 | Post Doc (No:1) (Full Time) | | 12 Months | 70,000 | 8,40,000 |
| 3 | Project Officers (No:2) (Full Time) | | 12 Months | 45,000 | 10,80,000 |
| 4 | Project Assistant (No:3) (Full Time) | | 12 Months | 30,000 | 10,80,000 |
| B | Source Apportionment (12 Months) | | | | |
| 1 | Ambient Air Quality | PM10, PM 2.5, SO2, NOx per NAAQMS Guidelines | 900 (25 days x 2 season x 18 Locations) | 3,000 | 27,00,000 |
| 2 | PM Filter Paper Characterisation | Carbon: OC, EC.<br>Ions: F, Cl, Br, NO2, NO3, SO4, K, NH4, Na, Ca, Mg | 900 (25 days x 2 season x 18 Locations) | 8,000 | 72,00,000 |

**CE (GI).C.NO: A2/0293/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Elements: Na, Mg, Al, Si, P, S, Cl, Ca, Br, V, Mn, Fe, Co, Ni, Cu, Zn, As, Ti, Ga, Rb, Y, Zr, Pd, Ag, In, Sn, La, Se, Sr, Mo, Cr, Cd, Sb, Ba, Hg, and Pb. | | | |
| C | Estimation of Carrying capacity (06 Months) | | | | |
| 1 | AERMOD software License | | | | 1,50,000 |
| 2 | Purchase of meteorological data | | | | 50,000 |
| 3 | Computational Charges | | | | 2,00,000 |
| 4 | IITM Expert Charges @ 5,000/- per hour per week | | | | 2,60,000 |
| D | Other Charges | | | | |
| 1 | Transport & logistics | | | | 2,00,000 |
| 2 | Miscellaneous | | | | 2,00,000 |
| 3 | Report preparation/software (5 copies) | | | 5,000 | 25,000 |
| E | Total A+B+C+D | | | | |
| 1 | Total | | | | 1,45,85,000 |
| 2 | Institute Overhead Charges (30%) | | | | 43,75,500 |
| 3 | Total Project cost (E1+E2) | | | | 1,89,60,500 |
| 4 | GST (18 %) | | | | 34,12,890 |
| 5 | Grand Total | | | | 2,23,73,390 |

The Total cost of the project is Rs.2,23,73,390/- which includes manpower, monitoring, instrument, analysis, computational facility, institute over head charges and taxes.

Hence,

1. To engage IIT-M for the effective implementation of National Clean Air Programme at a total project cost of Rs.2,23,73,390/- for a period of ONE year.
2. To make 50 % payment initially and the remaining 50% at the end of the one-year period.
3. To meet the expenditure from the XV FC grant of Rs.180 Cr already sanctioned for Chennai City.

Sl.No.1 to 3 above,orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner’s Note dated.27.08.2021 is read.

**“Sl.No. 1 to 3 are approved by Special Officer- Standing Committee (Health), Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council.”**

***********

ம.அ.5நக.எண்.சி2/6310/2021

**தீர்மானஎண்.682/2021** **நாள்:31-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5 - கோட்டம்- 49 முதல் 63 வரை உள்ள மாநகராட்சி பள்ளிகளின் சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள 87 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 01.06.2021 முதல் 30.04.2022 வரை நியமிக்க நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள 46 எண்ணிக்கையிலான சென்னை மாநகராட்சி பள்ளிக்கூடங்களில் உள்ள சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிகளை 86 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு மாதத்திற்கு 23 நாட்கள் பணி நாட்களாக நிர்ணயம் செய்து பணி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி அவர்களின் 06.07.2020 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு, சிறப்பு அதிகரி, மன்றத் தீர்மான எண்.461/2020, நாள்.09.07.2020 பெறப்பட்டு, 30.04.2021 அன்றுடன் பணி முடிவடைந்துள்ளது.

இதனை தொடர்ந்து சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.461/2020 நாள். 09.07.2020ன்படி பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து பள்ளி தலைமை ஆசிரியரிடம் பணியாளர்கள் வேண்டுவது சம்மந்தமான கடிதம் பெறப்பட்டுள்ளது. மேலும், பகுதி 13, வார்டு 53, நாட்டுப் பிள்ளையார் கோயில் தெரு உள்ள சமூகநல கல்லூரிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பணியாட்கள் கோரப்படாததால் இக்கல்லூரி தவிர்த்து மீதமுள்ள 42 பள்ளிகளுக்கு கோரப்பட்டுள்ளது.

மேலும், கல்வி அலுவலர் அவர்களின் 25.06.2021 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-5, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள 43 எண்ணிக்கையிலான சென்னை மாநகராட்சி பள்ளிக்கூடங்களில் 01.06.2021 முதல் கொரோனா மருத்துவ மற்றும் தடுப்பூசி முகாம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கை, விலையில்லா புத்தகம், சீருடை மற்றும் இணையதள வகுப்புகள் நடைபெறுவதால் அவசரம் அவசியம் கருதி ஏற்கனவே பணிபுரிந்த பணியாளர்களையே மீண்டும் 01.06.2021 முதல் நியமித்து பணி நடைபெறுவதாக கல்வி அலுவலர் அவர்கள் கோரியுள்ளார். மேலும், கீழ்கண்ட அட்டவணையில் வார்டு வரிசை எண் 49ல் உள்ள உருது பெண்கள் தொடக்கப்பள்ளிக்கு 10000 சதுர அடி காலியிடம் மற்றும் SSA அலுவலகம் உள்ளதாலும் 2 பணியாளர்கள் கூடுதலாக ஒதுக்கீடு செய்யவும் மற்றும் வார்டு 50 வரிசை எண் 10ல் உள்ள சென்னை நடுநிலைபள்ளி மணிகண்ட 8வது தெருவில் உள்ள பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளதால் கூடுதலாக ஒரு பணியாளரையும் சேர்த்து 87 பணியாளர்களை 01.06.2021 முதல் 30.04.2022 வரை நியமிக்கும் படி கோரியுள்ளார்.

மண்டலம்-5 ல் உள்ள மாநகராட்சி பள்ளிக்கூடங்களில் வகுப்பறைகளின் எண்ணிக்கை மற்றும் கழிவறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்களின் தேவைக்கு ஏற்றவாறு உரியகணக்கீடு செய்து கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கோட்டம் எண் | பள்ளியின் பெயர் | வகுப்பறைகளின் எண்ணிக்கை | கழிப்பறை இருக்கைகளின் எண்ணிக்கை | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 49 | சென்னை தொடக்கப்பள்ளி-கப்பல் போலு தெரு | 11 | 10 | 2 |
| 2 | 49 | சென்னை உயர்நிலைப்பள்ளி–அப்பாசாமி தெரு | 26 | 12 | 2 |
| 3 | 50 | சென்னை நடுநிலைப்பள்ளி-துரை தெரு | 7 | 12 | 2 |
| 4 | 50 | உருது பெண்கள் தொடக்கப்பள்ளி- அர்தூண் ரோடு | 7 | 6 | 3 |

ம.அ.5.ந.க.எண்.சி2/6310/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 50 | சென்னை உயர்நிலைப்பள்ளி-நாராயணன் தெரு | 6 | 8 | 2 |
| 6 | 51 | சென்னை தொடக்கப்பள்ளி-சிமட்ரி ரோடு | 8 | 4 | 2 |
| 7 | 51 | சென்னை தொடக்கப்பள்ளி-கிழக்கு சிமட்ரி ரோடு (மணிகண்டன் 6வது தெரு ) | 4 | 2 | 2 |
| 8 | 51 | சென்னை உருது (உருது & தமிழ் ) தொடக்கப்பள்ளி- கிழக்கு சிமட்ரி ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை | 5 | 3 | 2 |
| 9 | 51 | சென்னை நடுநிலைப்பள்ளி-சஞ்சிவிராயன் கோயில் தெரு | 11 | 5 | 2 |
| 10 | 51 | சென்னை மேல்நிலைப்பள்ளி மணிகண்டன் 8வது தெரு | 21 | 32 | 3 |
| 11 | 51 | சென்னை உருது ஆண்கள் உயர்நிலைப்பள்ளி-13 கிழக்கு சிமட்ரி ரோடு | 13 | 4 | 2 |
| 12 | 52 | சென்னை தொடக்கப்பள்ளி-ஓ.எஸ்.எச். ரோடு | 11 | 5 | 2 |
| 13 | 52 | சென்னை உயர்நிலைப்பள்ளி ஆஞ்சநேய நகர் | 6 | 3 | 2 |
| 14 | 53 | சென்னை உருது ஆண்கள் தொடக்கப்பள்ளி - காத்படா | 10 | 7 | 2 |
| 15 | 53 | சென்னை தொடக்கப்பள்ளி-சி.பி.ரோடு | 22 | 9 | 2 |
| 16 | 53 | சென்னை நடுநிலைப்பள்ளி-படவட்டம்மன் கோயில் தெரு | 8 | 5 | 2 |
| 17 | 53 | சென்னை தொடக்கப்பள்ளி-போஜராஜ நகர் தெரு | 7 | 3 | 2 |
| 18 | 53 | சென்னை உருது பெண்கள் நடுநிலைப்பள்ளி- லாலாகுண்டா வண்ணாரப்பேட்டை | 21 | 8 | 2 |
| 19 | 53 | சென்னை உயர்நிலைப்பள்ளி-சி.பி.ரோடு | 32 | 6 | 2 |
| 20 | 54 | சென்னை நடுநிலைப்பள்ளி-அம்மன் கோயில் தெரு | 15 | 11 | 2 |
| 21 | 55 | சென்னை நடுநிலைப்பள்ளி-போர்ச்சுகீஸ் சர்ச் தெரு | 19 | 12 | 2 |
| 22 | 56 | சென்னை நடுநிலைப்பள்ளி-(உருது) அம்மன் கோயில் தெரு | 3 | 6 | 2 |
| 23 | 56 | சென்னை நடுநிலைப்பள்ளி-செல்வ விநாயகர் கோயில் தெரு | 7 | 8 | 2 |
| 24 | 56 | சென்னை நடுநிலைப்பள்ளி-ராமாசாமி தெரு | 7 | 9 | 2 |
| 25 | 57 | சென்னை நடுநிலைப்பள்ளி-அண்ணாப்பிள்ளை தெரு | 9 | 10 | 2 |
| 26 | 57 | சென்னை உயர்நிலைப்பள்ளி-வால்டாக்ஸ் ரோடு | 20 | 25 | 2 |
| 27 | 60 | சென்னை நடுநிலைப்பள்ளி-அங்கப்பன் நாயக்கன் தெரு | 5 | 13 | 2 |
| 28 | 58 | சென்னை நடுநிலைப்பள்ளி-வி.கே.பிள்ளை தெரு | 24 | 16 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | 58 | சென்னை தொடக்கப்பள்ளி-அவதானப்பப்பையர் தெரு | 12 | 14 | 2 |
| 30 | 58 | சென்னை நடுநிலைப்பள்ளி-அவதானப்பப்பையர் தெரு | 12 | 10 | 2 |
| 31 | 58 | சென்னை நடுநிலைப்பள்ளி-வைக்காகாரன் தெரு | 10 | 8 | 2 |
| 32 | 58 | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி-ராட்லர் தெரு | 50 | 25 | 3 |
| 33 | 59 | சென்னை நடுநிலைப்பள்ளி-மின்ட் தெரு | 10 | 8 | 2 |
| 34 | 59 | சென்னை நடுநிலைப்பள்ளி-எல்லிஸ்புரம் | 7 | 5 | 2 |
| 35 | 59 | சென்னை தொடக்கப்பள்ளி-எஸ். எம். நகர் | 6 | 6 | 2 |
| 36 | 61 | சென்னை நடுநிலைப்பள்ளி-வீராசாமி தெரு | 7 | 4 | 2 |
| 37 | 61 | சென்னை நடுநிலைப்பள்ளி-வரதாராஜபுரம் ( பாண்டியத் ரோடு) | 8 | 12 | 2 |
| 38 | 61 | சென்னை உருது நடுநிலைப்பள்ளி- லாங்ஸ் கார்டன் ரோடு | 3 | 3 | 2 |
| 39 | 62 | சென்னை நடுநிலைப்பள்ளி-நராசிங்கபுரம் | 12 | 6 | 2 |
| 40 | 62 | சென்னை உயர்நிலைப்பள்ளி-வெஸ்ட் கூவம் ரோடு | 7 | 6 | 2 |
| 41 | 63 | சென்னை தொடக்கப்பள்ளி-கொய்யத்தோப்பு | 5 | 4 | 2 |
| 42 | 63 | சென்னை உயர்நிலைப்பள்ளி-கொய்யத்தோப்பு | 6 | 8 | 2 |
| | | மொத்தம் | 500 | 390 | 87 |

மண்டலம்-5ல் உள்ள 42 எண்ணிக்கையிலான பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிக்கூடங்களிலுள்ள சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்து பராமரிக்க 87 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் வரும் கல்வியாண்டு முடியும் காலம் வரை அதாவது 01.06.2021 முதல் 30.04.2022 வரை நியமிப்பது என்பது அவசியமாகிறது. இதன்படி மொத்த பணி நாட்கள் 253 (11X23) ஆகும். மேலும் தற்காலிக துப்புரவு பணியாளர்களின் ஊதிய விகிதத்தின் படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 87 பணியாளர்களுக்கு ஆகும் செலவு ரூ.410X 87 x 253 என ரூ.90,24,510/- (ரூபாய் தொண்ணூறு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐந்நூற்று பத்து மட்டும்) தேவைப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணிக்காக கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 230-150-500 ன் கீழ் தீர்வு செய்ய வேண்டி உள்ளது.

எனவே,

1) மண்டலம்-5ல் உள்ள 42 எண்ணிக்கையிலான மாநகராட்சி பள்ளிக்கூடங்களிலுள்ள சுற்றுப்புறம், வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய 01.06.2021 முதல் 30.04.2022 வரை மாதம் 23 பணி நாட்கள் என 253 நாட்கள் 87 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்யவும், அவசரம் அவசியம் கருதி பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு 01.06.2021 முதல் ஊதியம் வழங்க பின்னேர்ப்பு அனுமதி வேண்டியும்,

2) மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 87 பணியாளர்களுக்கு 253 நாட்களுக்கு ஆகும் செலவு தொகை ரூ. 410 x 87 x 253 என ரூ.90,24,510/- (ரூபாய் தொண்ணூறு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐந்நூற்று பத்து மட்டும்) ஆகும். இதற்கு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டியும் எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயக்கப்படின் நிர்ணயக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

3) மேற்படி பணிகளுக்கான செலவு தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 230-150-500 ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.5. ந.க.எண்.*4639 /2021***

**தீர்மானஎண்.683 / 2021** **நாள்:31-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5 வார்டு -58, ராட்லர் தெரு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய வார்டு-102 அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-5, பகுதி-*14*, வார்டு-*58*க்கு உட்பட்ட ராட்லர் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத பழைய வார்டு-*102* அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மேலும், இந்த இடத்தில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு இக்கட்டிடத்தை இடிக்க வேண்டுதல் அவசியமாகிறது.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம்= *75.77* ச.மீ,

புத்தக மதிப்பு = ரூ. 0.00

எனவே, மண்டலம்-*5*, வார்டு-*58*, ராட்லர் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத பழைய வார்டு-*102* அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பழைய வார்டு-*102* அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*** * * * * * ***

**S.P.D.C.No.B1/0487/2021**

**Resolution No.684/2021** **Date:31-08-2021**

**Greater Chennai Corporation – Special Projects Department – CITIIS "School Leadership Development and Transformation Program for GCC Schools" - Technical Committee Approved – For Administrative Sanction.**

CITIIS (City Investments To Innovate, Integrate and Sustain) is the main component of the 'Program to fund Smart City projects through a Challenge Process' launched by the Ministry of Housing and Urban Affairs (MoHUA) in July 2018. The CITIIS Challenge is a collaborative effort of MoHUA, AFD (France) and European Union (EU).

Under the CITIIS component, from over 65 proposals around the country, 12 projects including the "Model & SMART Corporation Schools in Chennai" proposal by Chennai Smart City Limited (CSCL) have been selected, vide D.O Letter dated.07.02.2019 from Director, Smart Cities, MoHUA regarding selection in CITIIS challenge . The project envisages a complete transformation of selected GCC schools across various components such as Physical Infrastructure, Digital Infrastructure, Teaching Pedagogy, Teacher Training, Sports & Extra Curriculars etc. It is a multidimensional project with niche features under each component, which shall be transformed holistically.

The total project outlay is Rs. 95.25 Cr, out of which Rs. 19.05 Cr (20%) is being borne by the SPV (CSCL). The remaining Rs. 76.2 Cr (80%) is a loan funded by AFD received as a grant by CSCL for this project purpose, with a commitment of repayment of 50% by the Govt. of Tamil Nadu and Govt. of India respectively vide G.O (D) No. 351 dated 03.09.2019.

M/s PricewaterhouseCoopers P.L. were appointed as PMC for the CITIIS project vide LoA for PMC dated 09.04.2020. Further, a Technical Committee for Infrastructure was appointed to review, scrutinize and approve the subcomponents vide order of Commissioner dated.20.10.2020. Since then the project has progressed and the DPR, detailing all the project level interventions have been developed, and approval of the Special Apex Committee, MoHUA have been obtained on 18.01.2021.

The Detailed Project Report describes the project components as follows:

1. Physical Infrastructure Revamp in eighteen campuses
2. Furniture Upgradation in eighteen campuses
3. Digital Infrastructure
4. Teacher Development
5. Sports and Extra-curricular Activities

"School Leadership Development and Transformation" is an intervention falling under the Teacher Development component and the features and sub-components are detailed below:

**School Leadership Development and Transformation for GCC Schools**

In response to the holistic transformation envisaged in the project, the School leadership will be required to manage change and challenges on various facets starting from maintaining superior schooling environment, IT enabled administration, measuring learning outcomes, transformation in pedagogical practices, managing human resources during change, developing a strong parent school engagement, building community trust, strengthening community support networks, drafting a 3-5 year development plan for the school and others.

**S.P.D.C.No.B1/0487/2021**

The Head Teacher and Senior Teachers at GCC School have been participating in leadership programs from time to time. However, the proposed School Leadership has a key role to play in driving, supporting and achieving the holistic transformation envisioned under "The Model & Smart Schools Project". The proposed program is also expected to translate the workshop-based learning into real-time application through mentor-supported guidance.

In the above context, the proposed "School Leadership Development and Transformation Program for GCC Schools" (SLDT) under the project has hence been structured to include 2 phases, namely

- **Phase 1:** Leadership Workshops - Conducted in a highly engaging, interactive manner involving case studies, group discussion and team challenges, on keys facets leadership facets identified as relevant to a performance oriented holistic school eco-system.
- **Phase 2:** On-field Hand-holding mentorship support - To guide in implementing workshop learnings in real time school management context

At the end of Phase 2, the SLDT program shall culminate in a showcase of impactful leaders, their impact stories & awards to recognise them. A baseline and end line study has also been structured into the program to understand change in mind-sets, attitudes and application of skills secured through the program.

It is proposed that a Training Service Provider, selected through a competitive bid process, is engaged to conduct the SLDT Program as per the scope detailed below:

1. The 10-day SLDT program is intended to be multi-faceted. An overview of the key facets the workshop shall cover is as outlined below. **Developing Self - Personal Leadership:** This would include facets of Emotional Intelligence for Organizational Excellence, Traits of Successful Principals, Leadership Styles & Strategies, Leading by Example and Ownership.

2. **Transforming Teaching Learning Process:** This would include facets of Educational Leadership for 21st Century Education and the paradigm shifts in teaching / learning paths, Changing Classroom Teaching & Learning in an ICT enabled environment, Using ICT for Collaboration Change, Leveraging ICT for performance analysis.

3. **Building & Leading Teams - Relational Leadership (Internal):** This would include facets w.r.t. Mentoring & Monitoring, Building Ownership & Accountability, Communication and Team Building.

4. **Leading Partnerships - Relational Leadership (External):** This would include facets w.r.t. Strengthening Parent Eco-system, Leveraging SMC and PTA, Building Community Support Systems.

5. **Administrative Leadership:** This would cover facets w.r.t. TQM for Schools, Budgeting, School Administration and Management MIS.

6. **Organisation Leadership – Leading Innovations:** This would cover facets w.r.t. Strategies for Branding and success of a school, Drawing out Road Map (Vision / Mission / Goal Setting), Principals (Head Teachers) As Change Makers, Innovate on Challenges in Education.

It is proposed that training service provider is to be selected through a Quality-Cum Cost Based Selection

**S.P.D.C.No.B1/0487/2021**

**Training Components & Duration:** An overview of the timelines and specific elements of the SLDT program under Phase I & Phase II are as detailed below:
**Overall Training Completion Timeline:** 24 calendar months
**Phase I: SLDT Workshop**

This will involve the training service provider conducting Leadership Workshops for the Future Leaders / Leaders at Chennai Schools, GCC.

| Particulars | Details |
|---|---|
| Workshop duration | 5 months for completing the training for all the training batches. This will be preceded by 2 months for preparation of training plan, curriculum, training materials, and submission of training plan reports. |
| Total no. of trainees | 600 participants covering AEOs, Headmasters (HMs), Assistant Headmasters (AHMs) and select Senior Teachers. |
| Total no. of training batches to be trained in a month | 20 No. of training batches |
| No. of trainees per batch | 30 No. of trainees |
| No. of training days per batch in a month | 2 days |
| No. of months over which training will be held for a batch | 5 months |
| Total no. of training days per batch spread across 5-month period | 10 days training per batch<br>(2 days in a month) |
| Total training equivalent days/duration for SLDT Workshop | 200 training equivalent days spread over 5-month period<br>(20 No. of training batch * 10 days training per batch) |

Two GCC schools shall be identified as venues for the workshops. GCC shall provide uninterrupted power supply for carrying out all the training sessions.

***Approach to the Phase I SLDT Workshop Roll-Out:***

Each of the 20 training batches will undergo training for a period of 2 days in a month spread across 5 months. Each month of the training program will focus on one Key Leadership theme. The training will sequentially take them through each of the leadership themes starting from Personal Leadership in Month 1 and culminating with Organizational Leadership in Month 5 as detailed below.

i. Month 1 Training Theme: Developing Self-Personal Leadership
ii. Month 2 Training Theme: Transforming Teaching Learning Process – Educational Leadership
iii. Month 3 Training Theme:
   a. Building & Leading Teams – Relational Leadership (Internal)
   b. Leading Partnerships – Relational Leadership (External)
iv. Month 4 Training Theme: Administrative Leadership
v. Month 5 Training Theme: Organisation Leadership – Leading Innovations

**Phase II: On-field Hand-Holding and Mentoring Support in Schools**

The SLDT initiative requires the training service provider to provide on-field mentoring support to the participants at their respective schools. Such on-filed mentoring support shall be provided over a period of 21 months. The on-field monthly mentoring support required to be provided across 281 schools is presented below:

**S.P.D.C.No.B1/0487/2021**

| **Particulars** | **Details** |
|---|---|
| Overall on-field support duration | For an overall time period of 2 years which includes time for preparation of school visit plan, key action / focus areas for a school and submission of reports on completion of the workshop training calendar, with on-field mentoring commencing for the trainee batches, from the month immediately following the completion of Month-1 SLDT Training Calendar. |
| Total no. of mentees | 600 mentees covering Assistant Educational Officers (AEOs), Headmasters (HMs), Assistant Headmasters (AHMs) and select Senior Teachers. |
| No. of schools to be visited in a month | 281 schools |
| No. of school visit / month / mentor | Min. 19 Nos. |
| Total no. of on-field mentors | Min. 15 Nos. |
| No. of months of on-field mentoring support | Min. 20 Months spanning across 2-year period |
| School field visit frequency | Min. 9 Mentor visits per school per year over a period of 2-years (with minimum 1 visit per school per month) |

***Approach to the Phase II On-field Hand-holding and Mentoring Support***

The Phase II of the program spanning across a 21-month period, will start immediately after completion of Month-1 SDLT program Training calendar for the 20 Batches.

Discussions were conducted with various service providers and their proposals were analysed, vide Comparative Note prepared by PMC/ CITIIS dated 30.04.2021. Based on the same, a cost abstract was derived.

The table below presents the cost abstract:

| **S. No** | **Description*** | **QTY (Unit Nos.)** | **Unit** | **Unit Cost (INR) Excluding GST** | **Amount (INR) (Excluding GST)** | **Remarks** |
|---|---|---|---|---|---|---|
| 1 | Curriculum Development of Training Modules (6 modules) | 1 | Program | 3,90,000 | 3,90,000 | Lump sum cost for development of training modules |
| 2 | Preparing and Conducting Baseline and Endline Assessment | 600 | Assessments (Baseline + Endline) | 173 | 1,03,800 | |
| 3 | Team Leader- 1 personnel | 24 | Man-Months | 1,51,666 | 36,39,980 | Includes salary, training related equipment, MIS platform usage, and other project related out of pocket expenses such as travel, conveyance, communication costs etc. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | Senior Trainer – 2 personnel (5 person months each) | 10 | Man-Months | 1,10,084 | 11,00,840 | Includes salary, Training of Trainers, training related equipment, and other project related out-of-pocket expenses such as travel, conveyance, communication costs, meals during training etc. |
| 5 | Support Trainer | 10 | Man-Months | 87,584 | 8,75,840 | |
| 6 | On-field Mentor - 15 personnel (20 Months each) | 300 | Man-Months | 37,969 | 1,13,90,700 | Includes salary, staff training, tablets for field mentoring, felicitation awards (Y1 & Y2), impact study (Y2), MIS Platform use and other project related out of pocket expenses such as travel, conveyance, communication costs, misc. expenses etc. |
| 7 | Training Material, Handouts and Stationery, Booklets, Feedback forms, notepads and pens] | 600 | Participants | 800 | 4,80,000 | |
| 8 | Lunch and Snacks for 600 participants attending SLDT training for 10 days | 6000 | Participant days | 250 | 15,00,000 | |
| 9 | Shared support services (Grant management, Admin & Ops, AND Procurement | 24 | Man-Months | 50,000 | 12,00,000 | |
| | **Total Cost Excluding GST** | | | | **2,06,81,160** | |
| | **GST @18%** | | | | **37,22,609** | |
| | **Total Cost including GST@18% in figures** | | | | **2,44,03,769** | |
| | **Total Cost including GST@18% in words** | | | | **Rupees Two Crores Forty Four Lakhs Three Thousand Seven Hundred and Sixty Nine Only** | |

During the review meeting, Principal Secretary / Commissioner has given instructions to initiate the approval process for the “School Leadership Development and Transformation Program for GCC Schools”, vide proceedings of meeting chaired by Principal Secretary / Commissioner dated 04.06.2021.

The scope of work and the Request for Proposal (RfP) for “Selection of Training Service Provider for “School Leadership Development and Transformation” under the CITIIS Challenge Initiative has also been prepared.

The proposal was placed before the Technical Committee – Academic activities and approval was obtained.

**S.P.D.C.No.B1/0487/2021**

Deputy Commissioner (Education) provided the following inputs:

I. It is to be ensured that the classroom availability over the 24-months is flexible and kept subject to the chosen school's curriculuar/extra-curricular activities.

II. There can be a co-participation of the AEO's with the on-field mentors so that, there is an institutional memory that is created.

These have been subsequently incorporated in the Request for Proposal Document in Section 4.4, (page 17) and in Section 6 (page 26) respectively.

Hence,

1) To accord Administrative Sanction for School Leadership Development and Transformation Program for GCC Schools at an estimated cost of Rs. 2,44,03,769/- (Rupees Two Crores FourtyFour Lakhs Three Thousand Seven Hundred and Sixty-Nine Only).
2) To take up the project under CITIIS fund maintained by Chennai Smart City Limited
3) To place the proposal before the Chennai Smart City Limited Board for approval.
4) To call for Tender for the selection of Training Service Provider for the above work.

Sl.No.1 to 4 above, orders of the Special Officer- Standing Committee (Education), Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.29.08.2021 is read.

**"Sl.No. 1 to 4 are approved by Special Officer- Standing Committee (Education), Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

***********